Q.P. Code : 13307

# Third Semester B.Com./B.B.A./B.H.M. Degree Examinations, November/December 2019

*(CBCS Scheme – Freshers – 2019-20 and onwards)*

## TAMIL LANGUAGE

## Part-I, Paper-III

*Time : 3 Hours]* *[Max. Marks : 70*

I. விரிவான விடை தருக :

1. 'நன்றியில் செல்வம்' குறித்து பழமொழி நானூறு கூறும் கருத்துக்களைத் தொகுத்து வரை.

(அல்லது)

திரிகடுகம் கூறும் அறக்கருத்துக்கள் யாவை? **(10)**

2. அனுமன் காலை ஊன்றி எழுந்த போது மலை, கடலில் நிகழ்ந்தவற்றை விளக்குக.

(அல்லது)

அனுமன் சரசையை வென்று விரைந்தமை குறித்து விளக்கி வரைக. **(10)**

II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக :

1. ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார்

(அல்லது)

நாய்பெற்ற தெங்கம் பழம் **(4)**

2. அண்டமும் திசைகள் எட்டும் அதிரத் தோள்
கொட்டி ஆர்த்தான்..

(அல்லது)

நல்நகர் அதனை நோக்கிநளினக் கைம்மறித்து நாகர்
பொன்னகர் இதனை ஒக்கும். **(4)**

Scanned by CamScanner

III. 'இலக்கிய உலா' என்னும் நூலில் இருந்து பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றிற்குக்** கட்டுரை வடிவில் விடை தருக : **(15)**

1. ஐக்கூக் கவிதைகளில் இயற்கை
2. ராஜம் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள்
3. அகப் பேய் சித்தரின் பாடல்கள்

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக : **(5 × 4 = 20)**

1. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. போலி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
3. ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகளில் ஒன்றைச் சான்றுடன் புலப்படுத்துக.
4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.
5. அகத்திணைக்குரிய முதற்பொருள் குறித்து எழுதுக.
6. புறத்திணை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
7. சீரின் வகைகளைச் சான்றுடன் கூறுக.
8. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

V. நீவிர் பணிபுரியும் நிறுவனத்தில் ஓய்வு அறைகளை அமைத்துத் தரக்கோரி, உதவி மேலாளர் என்ற நிலையில் அதன் முதன்மை நிர்வாக இயக்குநருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக. **(7)**

Scanned by CamScanner